ISSN : 2456-821X Vol. 5 Issue 2 Dec 2021

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# பத்துப்பாட்டில் குடியிருப்பும் அதன் கட்டமைப்பும்

**ச. மணிமேகலை,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர் - 635601, திருப்பத்தூர்

## முன்னுரை

"குரங்கில் இருந்து மனிதன் பிறந்தான்" என்ற கூற்றுக்கேற்ப ஆதிக்காலத்தில் மனிதன் மரக்கிளையும் மலைக்குகைகளையும் தன் இருப்பிடமாக் கொண்டிருந்தான் என்று கூறலாம். கொடிய விலங்குகளின் தாக்குதலில் இருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்காகவும், மழை, புயல், பனி முதலிய இயற்கை இடர்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடலாயினான். இலை, தழை, புல் முதலியவற்றாலும் கழிகளாலும் குடிசைகள் அமைத்து வாழக்கற்றுக் கொண்டான். அவற்றை இலைவேய் குரம்பை, புல்வேய் குரம்பை என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வேட்டைச் சமூகமாக வாழ்ந்த எயினர்களும், மேய்ச்சல் சமூகமாக வாழ்ந்த இடையர்களும் குறிஞ்சி நிலத்திலும் முல்லை நிலத்திலும் அரண்களையும், குடியிருப்புகளைக் குறித்தும், குடியிருப்புகளின் கட்டமைப்பு முறைகளைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## குறிஞ்சி நிலத்தவர் குடியிருப்பு

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் தினை முதலிய பயிர் வகைகள் விளைவிக்கப்பட்டன. அதனைக் கவர வருகின்ற யானை, பன்றி முதலிய விலங்குகளையும் கிளி முதலிய பறவைகளையும் விரட்டுவதற்காகத் கானவா் உயா்ந்த மரக்கிளையில் பரண் அமைத்துக் கொண்டனர். இதனை,

"வேழங் காவலா் குரம்பை யேய்ப்பக்

கோழி சேக்குங் கூடுடைப் புதவின்"[1]

என்னும் பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

குறிஞ்சி நில மக்கள் தினைகளைச் சேகரித்த பிறகு அதனுடைய தாள்களிலேயே, கொம்புகளை நட்டு குடில் அமைத்தனர், இச்செயலை,

“விருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்

பிணையேர் நோக்கின் மனையோன் மடுப்பத்”[2]

என்றும், குறிஞ்சி நிலத்தவர் கழிகளை நட்டுப் புல்லால் வேயப்பட்ட குடில்களில் வாழ்ந்தனர் என்பதை,

“வகலு ளாங்கட் கழிமிடைந்தியற்றிய

புல்வேய் குரம்பைக் குடிதோறும்”[3]

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

ஆகையால் குறிஞ்சி நிலத்தவர் தினை போன்ற பயிர்களை விளைய வைப்பவர்கள். ஆதலால், அவர்கள் மரத்தின் மேல் இலைதழைகளை அள்ளி வைத்தும், தினையின் தாளைக் கொண்டு குடில்கள் அமைத்தும், வளர்ந்த புல்களைக் கொண்டு தங்களது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டார்கள்

முல்லை நிலத்தவர் குடியிருப்பு

காடும் காடு சார்ந்த இடத்தினையும் கொண்டது முல்லை நிலமாகும். இந்நிலத்தில் ஆடு மாடுகளை வளர்ந்து வாழ்ந்தனர். இந்நில மக்களின் குடியிருப்புகள் வரகுத் தட்டையால் வேயப்பட்டவை. ஆடுகள் தின்னுவதற்காகத் தழைகள் கட்டப்பட்டிருக்கும் சிறிய தூண்களை உடைய குடிசையானது சிறிய தூறுகளைக் கொண்ட வாயிலையும், மூங்கில் கொண்டு செறிவாகக் கட்டப்பட்ட கதவினையும், ஆட்டுக் கிடாய்கள் கட்டப்பட்டிருக்கும் நீண்ட தாம்புக் கயிறுகள் உடைய முற்றத்தில் சிறிய முட்களைக் கொண்டு கட்டப்பட்ட வேலியினை உடைய குடிசையில் ஆயர்கள் ஆட்டுக்கிடாயின் தோல்களையே பாயாகப் பயன்படுத்தித் துயில் கொண்டிருந்தனர் இச்செய்தியினை,

“............. மறிய

குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்

செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்

கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்

அதளோண் துஞ்சுங் காப்பின் உதள”

நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்

கொடுமுகத் துருவையொடு வெள்ளை

இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்”[4]

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

மேலும், முல்லை நிலத்துச் சீறூர்களில் வாழ்ந்த ஆயர்கள் இல்லங்கள் மழைக்காலத்தில் வானத்தில் பரவியிருக்கும் மேகங்களைப் போன்று வரகு வைக்கோல்களால் வேயப்பட்டிருக்கும். விடத்தேர் என்ற செடிகள் வளர்ந்திருக்கின்ற தொழுக்களின் எல்லைகளில் பெண் யானையின் கூட்டம் போன்ற வரகுகளைத் தன்னகத்தே கொண்ட குதிர்கள் இருக்கும் முற்றத்தையும், யானையின் கால் போலத் தோற்றமளிக்கின்ற வரகு திரிக்கும் திரிகை உள்ள பந்தலையும், கலப்பையும் உருளைகளும் வைக்கப்படும் கொட்டில் ஒன்றும் இருந்தது. அக்கொட்டிலின் ஒரு பக்கத்தில் எருதுகள் கட்டப்பட்டிருந்தன. இதனை,

“பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றித்

களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்

குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி

நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்

பருவ வானத்துப் பாமழை கடுப்பக்

கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்”[5]

என்னும் பாடலடிகளைக் கொண்டு அறிய முடிகின்றது.

மருத நிலத்தவர் குடியிருப்பு

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருத நிலமாகும். மருதநிலம் பசுமை நிறைந்த வயல்களும் தோட்டங்களும் தோப்புக்களும் சோலைகளும் நிறைந்து காணப்படும் பகுதியாகும். உழவர் வயல்களைப் பாதுகாப்பதன் பொருட்டு, வயல் பரப்பில் புதிய வைக்கோல் கொண்டு வேயப்பட்டதுமான குவிந்த குடிசை அமைத்தனர். அக்குடிசையின் முற்றத்தில் அவல் இடிப்பர் இச்செயலை,

“பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்

புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்

அவலெறி உலக்கைப் பாடுவிறந் தயல”[6]

என்னும் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், தென்னந் தோப்புக்களுக்கு இடையே மருதநிலச் சிற்றூர்கள் பல இருந்தன. யானையின் உடம்பு போன்ற சொர சொரப்பினை உடைய தென்னையின் காய்ந்த ஓலைகளால் வேயப்பட்ட குடியிருப்புகள் அமைந்திருந்தன. அவ்வாறான குடிசைகளின் முற்றத்தில் மஞ்சள் பயிரிடப்பட்டிருந்தது. அக்குடியிருப்புகளுக்குப் பின்னே மணம் மிகுந்த பூந்தோட்டங்கள் இருந்தன. இதனை,

"வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த

மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்

தண்டலை யுழவர் தனிமணச் சேப்பின்"[7]

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

நெய்தல் நிலத்தவர் குடியிருப்பு

கடலும் கடல் சார்ந்து காணப்படும் இடங்களும் நெய்தல் நிலமாகும் இந்நிலத்தவர்கள் மீன் பிடித்தலையே தொழிலாகக் கொண்டவர்கள். தொழிலுக்கேற்ப அவர்களது குடியிருப்புகளும் கடற்கரை ஓரங்களிலே அமைந்திருந்தன. இக்குடிசைகள் தாழ்ந்த கூரையைக் கொண்டதாக இருந்தன. சிறிய நுழைவாயிலைக் கொண்டிருக்கும் பரதவர்களாகிய மீனவர்களின் வீட்டுக் கூரையில் தூண்டில் கம்புகள் சொருகி வைக்கப்பட்டிருந்தன. வெண்மையான மணற்பரப்பில் பரதவர்கள் தங்கள் வீட்டின் முன்பு மீன் பிடித்த ஈரமான வலையை வைத்திருப்பார்கள். இதனை,

"நெடுந்தூண்டிலிற் காழ்சோர்த்திய

குறுங்கூரைக் குடிநாப்பண்

நிலவடைந்த இருள்போல

வலையுணங்கு மணல் முன்றில்"[8]

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணார் கூறுகின்றார்.

பாலை நிலத்தவர் குடியிருப்பு

பாலை நிலம் என்பது மணலும் மணல் சார்ந்த பகுதியாகும். இங்கு உணவு தானியங்களை விளைவிக்க முடியாது. நீர்நிலைகள் இல்லாததால் வெற்றிடப் பகுதி இது எனலாம். இவர்களது குடியிருப்புகள் சிறிய குடிசைகளாக இருந்தது. வெப்பம் அதிகமான காலங்களில் அங்குள்ளோர் மிகவும் துன்புற்றனர் என்பதை,

"உறு வெயிற் குலைஇய உருப்பவர் குரம்பை"[9]

என்ற அடியின் மூலம் அறிய முடிகிறது.

மேலும், எயினர் வீடுகளில் சங்கிலியால் நாய்களைக் கட்டி வைத்திருக்கும் கடுமையான காவல் அமைந்திருக்கும் வீடுகளையும், பல விதமான சிற்றுயிர்கள் வாழும் முள் வேலியினையும் அதனை அடுத்துள்ள காவல் காட்டினையும், திரட்சியான நிலையில் சேர்ந்த பல பலகைகள் ஒட்டப்பட்ட கதவினையும் உடைய வீட்டினை,

"தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்

வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை"[10]

என்னும் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

அரண்மனை

நகரின் நடுவில் அரண்மனையும் இருந்தது. இங்கு மன்னர்கள் வசித்தனர் அரண்மனையைச் சுற்றி அரண்கள் இருந்தன. கோட்டை வாயில் மிகவும் பெரியதாக இருந்தது. கோட்டையைச் சுற்றிருந்த மதிற்சுவர் உயரமாகவும், பகைவர்கள் வந்தால் தாக்குவதற்கு ஏற்ற மறைவிடங்களையும் கொண்டு விளங்கியது. ஞாயிற்றின் நிழல் நேர் ஒழுங்காக வீழும் அமையம் குறித்துக் கொள்ளப்படும் சூரியனின் கதிர்கள் நிலத்தில் ஊன்றப்பட்ட இருகோல்களின் மீதும்பட்டு அக்கோல்களின் நிழல் வடக்கிலோ தெற்கிலோ சாயாமல் இருக்கின்ற நாட்களான சித்திரை மாதம் பத்தாம் நாள் தொடங்கி இருபதாம் நாளுக்குள்ளாக ஒரு நாளில் பதினைந்து நாழிகைக் காலத்தில் சிற்ப நூல் கற்றறிந்தவராகிய தச்சர் நூலை நேரே பிடித்துத் திசைகளை அளந்து குறித்துக் கொண்டு அரசர்கள் வாழ்வதற்கு ஏற்ற அரண்மனைகளையும் அதற்குண்டான வாயிற்களையும் மண்டபங்களையும் இன்னும் பலவற்றையும் இங்கு அமைத்தும், அமைப்பினையும் அளந்து கொள்வர்.

மாளிகைகள் கட்ட நிலம் அளவை செய்யும் காலம் 15 நாழிகை எனக் குறிப்பிடுவதனால், சித்திரை மாதம் சூரியன் நேர் கோட்டில் வரும் காலம்.

1 நாள் = 60 நாழிகை

1 நாழிகை = 24 நிமிடங்கள்

15 × 24 = 360 நிமிடங்கள்

15 நாழிகை × 24 (1 நாள்) = 360 நிமிடங்கள்

என்று எடுத்துக் கொண்டதால் நடப்பட்ட கோல்களில் நிழல் சாயாத நேரம் மதியம் 12 மணி அக்காலத்திலேயே தச்சர்கள் நூல்கொண்டு அரண்மனை கட்டுவதற்கு அளவு குறித்தனர் என்பது இதனால் புலனாகிறது. இதனை,

"................. மாதிரம்
விரிகதிர் பரப்பில் வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கோ

பொருதிறற் சாரா அரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து”[11]

என்னும் பாடலடிகளில் அறிய முடிகின்றது.

சங்க காலத்தில் மக்கள் அவ்வ நிலத்திற்கு தகுந்தாற் போன்று குடியிருப்புகளை கொண்டும், அதே சமயம் வளமையான சூழ்நிலைகளை குறிப்பதற்கு அரண்மனைகளும் இருந்துள்ளனர். அந்த அரண்மனைகளில் உயர்ந்த மாடங்கள் இருந்துள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

சுவர்

குடிசைகள் பெரும்பாலும் சுவர்கள் உடையதாக இருந்தன என்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. குடிசைக்குச் செம்மண் பூசுவர் என்பதன் மூலம் தரை, சுவர் போன்றவற்றிற்குச் செம்மண் கொண்டு பூசியிருந்தனர். மேலும் கலப்பையைச் சார்த்தி வைப்பதால் சுவர் தேய்ந்து காணப்பட்டதை,

“குறுஞ்சாட்டுருளையொடு கலப்பை சார்த்தி

நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்”[12]

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மண் சுவராக இருந்ததால் கலப்பையை சார்த்தி வைக்கும்போது சுவரானது தேய்ந்து காணப்பெற்றது என்று அறியலாம். இதனையே அகநானூறும் கூறுகிறது. குடிலின் தாழ்வாரத்தில் சுண்ணாம்பு பூசியிருந்ததை,

“……..இறைமிசை

மாரிச் சுதையின் ஈர்ம்புறத்து அன்ன”[13]

என்ற அடிகள் உணர்த்துகின்றன. குடிசைகளில் மண்சுவர் இருந்துள்ளது அதனைச் செம்மண், சுண்ணாம்பு பூசி குடிசைகளை அழகு செய்தனர் என்று உணரப்பெறுகின்றது.

முடிவுரை

நாடோடியாகத் திரிந்து அலைந்த மனிதன் பின்னர் ஒரே இடத்தில் வசிக்க ஆரம்பித்துள்ளான். முதலில் காடு, குகை போன்றவற்றில் வசிக்க ஆரம்பித்து அவற்றின் தோற்றத்தைக் கொண்டு, அதைப் போலவே குடிசைகள் அமைக்கத் தொடங்கினான். அவனுக்கு கிடைக்கக்கூடிய பொருட்களை கொண்டு வீடுகள் அமைத்து வாழ்ந்தான். மரங்களை வைத்து மரக்கால் கொண்டு அமைக்கப்பட்ட குடிசைகள், காட்டு விலங்குகளால் ஆபத்து வராத வண்ணம் குடிசைகளுக்கு வாயில்கள் அமைத்தும் இருந்தனர். குடிசையின் கூரைகளை ஊகம்புல், தென்னைமடல், தாழையின் தூறுகள், பனையோலை, வரகுத்தாள், தருப்பைப்புல், தழைகள், கூவையிலை, ஈந்தின் இலை, வைக்கோல் ஆகியன கொண்டு குடிசையின் கூரைகள் வேய்ந்துள்ளனர். வீடானது சுவர் கொண்டும்

அமைக்கப்பட்டு இருந்தது. வளமைத்தன்மை கொண்டவர்கள் அரண்மனை போன்ற பெரிய மாளிகைகளிலும் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது. அம்மாளிகைகளில் மாடங்கள் மேகங்கள் உயர்ந்து காணப்படுவதைப் போன்று உயரமாக இருந்துள்ளன. அச்சுவர்களுக்கு செம்மண் பூசுதல், சுண்ணாம்பு பூசுதல் போன்ற வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன போன்ற கருத்துக்கள் சுட்டப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. பெரும்பாண். 51-52
2. குறிஞ்சி. 153-154
3. மலைபடு. 438-439
4. பெரும்பாண். 147-154
5. மேலது. 186-191
6. மேலது. 224-226
7. மேலது. 353-355
8. பட்டினப். 80-83
9. சிறுபாண். 174
10. பெரும்பாண். 125-126
11. நெடுநல். 72 - 78
12. பெரும். 188 - 189
13. அகம். 346